**செய்தி வெளியீடு எண் : 2320** **நாள் : 22.11.2023**

**கணித்தமிழ்24 பன்னாட்டு மாநாடு – நிரலாக்கப் போட்டி (Hackathon) அறிவிப்பு**

கணித்தமிழ்24 பன்னாட்டு மாநாட்டின் ஒரு பகுதியாக நிரலாக்கப் போட்டி (Hackathon) நடத்தப்படவிருப்பதாக தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் திரு. சே.ரா. காந்தி அவர்கள் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடந்த 'தமிழிணையம்99' மாநாட்டுக்குப் பிறகு 25 ஆண்டுகள் கழித்து தமிழ்நாடு அரசு ஒருங்கிணைக்கும் பன்னாட்டுக் கணித்தமிழ்24 மாநாடு, எதிர்வரும் பிப்ரவரி மாதம் 8, 9, 10 ஆகிய நாள்களில் சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள வர்த்தக மையத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. உலகு தழுவி வாழும் தமிழர்களுக்கு இணைய வழியில் தமிழ் கற்றுக்கொடுத்தல், தமிழ் நூல்களையும் இதழ்களையும் அரிய ஆவணங்களையும் மின்னுருவாக்கம் செய்தல், கணினித் தமிழை மேம்படுத்துதல் ஆகிய முக்கியமான பணிகளைச் செய்துவரும் தமிழ் இணையக் கல்விக்கழகம் இந்த மாபெரும் மாநாட்டை ஒருங்கிணைக்கிறது.

'தமிழிணையம்99' மாநாட்டுக்குப் பிறகு இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் தொழில்நுட்பம் அடைந்திருக்கும் வளர்ச்சி மிக அதிகம். செயற்கை நுண்ணறிவு என்று சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே நாம் பேசத் தொடங்கிவிட்டாலும் அண்மைக் காலத்தில்தான் அது முழுவீச்சில் களம் கண்டிருக்கிறது. எனவே, வளர்ந்துவரும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் தமிழுக்கான இடம் என்ன என்ற கேள்வியோடு, இந்தப் பன்னாட்டு மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வுக் கட்டுரைகள், உரைகள், விவாதங்கள், கலந்துரையாடல்கள், காட்சி அரங்குகள் ஆகியவை கணித்தமிழ்24 மாநாட்டின் முக்கியக் கூறுகளாகும்.

இம்மாநாட்டின் ஒரு பகுதியாக தமிழ் இணையக் கல்விக்கழகமானது StartupTN நிறுவனத்துடன் இணைந்து நிரலாக்கப் போட்டியை (Hackathon) நடத்துகிறது. இப்போட்டியின் வாயிலாக நவீனத் தொழில்நுட்பங்களான இயற்கை மொழி ஆய்வு, இயந்திரவழிக் கற்றல், செயற்கை நுண்ணறிவு, இதர டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் தமிழ் மொழியின் வளமையை வெளிக்கொணரவும், புதுமைகளைச் சிந்திக்கத் தூண்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

டிஜிட்டல் யுகத்தில் தமிழ் மொழியின் பயன்பாட்டையும் புரிதலையும் மேம்படுத்தும் புதுமையான கருவிகள் உருவாக்குவதை ஊக்குவித்தல், மொழியியல் அறிஞர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தமிழ்

மொழியில் தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்துதல், கல்வி, உள்ளடக்க உருவாக்கம், தகவல்தொடர்பு போன்ற தளங்களில் பரந்துபட்ட பயனர்கள் பயன்படுத்தும் விதமாகத் தமிழ் மொழியைக் கொண்டுவருவதற்கான தீர்வுகளை உருவாக்குதல், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் தமிழ் மொழியைச் செழுமையுடன் பயன்படுத்துவதற்கான சூழலை உருவாக்குதல் ஆகியவை இந்த நிரலாக்கப் போட்டியின் நோக்கங்களாகும்.

தமிழ் எழுத்துணரி (Tamil OCR), தமிழ்ப் பேச்சைப் புரிந்துகொள்ளுதல் (Tamil Speech Recognition), தமிழ் உள்ளடக்க உருவாக்கம் (Tamil Content Creation), தமிழ் உரையாடி (Tamil Chatbot), தமிழில் இயற்கை மொழி ஆய்வு (Tamil Language NLP) உள்ளிட்ட 20–க்கும் மேற்பட்ட தலைப்புகளில் நிரலாக்கப் போட்டி நடத்தப்படுகிறது. இந்தப் போட்டியில் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களும், ஆர்வலர்களும், மொழித் தொழில்நுட்பம் சார்ந்து செயல்படும் நிறுவனங்களும் கலந்துகொள்ளலாம்.

இந்தப் போட்டியில் மிகச் சிறப்பாகப் பங்களிப்பவர்களுக்கு, கணித்தமிழ்24 மாநாட்டில் செயல்விளக்கம் அளிக்க வாய்ப்பு வழங்கப்படும். அவர்களுக்கான பரிசுகளும் மாநாட்டின்போது வழங்கப்படும். மேலும், நிரலாக்கப் போட்டியிலிருந்து உருவாகியிருக்கும் கருவிகள், மென்பொருள்கள், தளங்கள், தொழில்நுட்பங்கள் போன்றவை ஆய்வாளர்கள் மற்றும் பொதுப் பயன்பாட்டிற்காக www.tamilvu.org இணையதளத்தில் பதிவேற்றப்படும்.

அர்ப்பணிப்புமிக்க தொழில்நுட்ப வல்லுநர்கள், தொலைநோக்குச் சிந்தனையாளர்கள், அனுபவமிக்க மொழியியல் அறிஞர்கள், கல்விச் சமூகத்தினர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டும் முயற்சி இது. இதன் மூலம், தமிழ் மொழியின் பரவலான இருப்பையும், தற்காலத் தொழில்நுட்ப வளர்ச்சிகளில் தமிழ் மொழியின் நிலையையும் வெளிக்கொண்டுவர முடியும். இது இளம் தலைமுறையினருக்கு மிகப் பெரும் அனுபவமாக இருக்கும். இது போட்டியாக மட்டுமல்லாமல், கற்றல் செயல்பாடாகவும் இருக்கும். புதிய வாசல்களைத் திறந்துவைக்கும். நிரலாக்கப் போட்டி குறித்த விரிவான விவரங்களுக்கு: https://www.kanitamil.in/#/hackathon

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in